சார்பு நீதிமன்றம், இலால்குடி.
O.S.No.702/2018

2022-ம் ஆண்டு வியாழக்கிழமை நவம்பர் 10-ம் நாள் DW2 சாட்சியின் வாக்குமூலம். 54 வது விதிகள் 9 வது பிரிவின்படி இந்நீதிமன்ற இளநிலை உதவியாளர் திரு .சோமு அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

பெயர் - இளங்கோவன்
த/பெ -
வயது -
ஊர் -
வட்டம் -
மாவட்டம் -

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் . பி.சா.2 ஆக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் . அதில் உள்ள சங்கதிகள் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் விவசாய கூலி வேலை செய்கிறேன் . பாஸ்கர் கொத்தனார் வேலையும் பார்ப்பார், மேஸ்திரி வேலையும் பார்ப்பார் . பாஸ்கர் ஜஸ்வர்யா நகரில் குடியிருக்கிறார். அவரது வீட்டு எண் எனக்கு தெரியாது . எனது வீட்டு எண். 16D. பாஸ்கர் வீடு சொந்த வீடா என்று எனக்கு தெரியாது எங்கள் இருவருக்கும் இலால்குடி தான் சொந்த ஊர் அவர் எனக்கு சிறுவயதிலிருந்து பழக்கம். அவர் என்ன படித்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு நகை அடகு வைத்தது சம்மந்தமான வழக்கு . அடகு வைத்த போது நான் உடனிருந்ததால் அது பற்றி சொல்ல சொன்னார். எந்த நகை அடகு வைத்தார் என்றால் செயின் வைப்பதாக

சொன்னார். வேறு எதுவும் எனக்கு தெரியாது . நகையை மீட்க என்னை அழைத்தார். நான் சென்றேன். ஆனால் மாடி ஏறவில்லை கீழயே நின்று கொண்டேன். எவ்வளவுக்கு அடகு வைத்தார் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அந்த நகை திருட்டு நகை என்று போலிசார் வாங்கி சென்று விட்ட விபரம் எனக்கு தெரியாது . பாஸ்கர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை . வழக்கறிஞர் அழைத்ததால் நான் வந்திருக்கிறேன். பாஸ்கருக்கு மூன்று பிள்ளைகள். நான் அடகு வைத்த ரசீதை பார்க்கவில்லை. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

/Signed/
இளங்கோவன்

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி